4வது கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.189/2015 நாள்: 24.03.2026 வா.சா.1 – கோபாலகிருஷ்ணன்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

தாத்தவர் நாயக்கர் தாவா சொத்தை பொறுத்து மாரிமுத்து மகளுக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான், என்ன வகையான பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. ராமானுஜ மடாலயத்தை யார் கட்டினார்கள் என்றால் சாட்சி பெரியவர்கள் கட்டினார்கள், ஆனால் யார் கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்று கூறுகிறார். மேற்படி மடாலயத்திற்கு அறக்கட்டளைதாரர்கள் யாரும் கிடையாது. தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் எனது தகப்பனார் வழியில், வழி வழி முறையாக வந்தது என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்து மாரிமுத்து பிள்ளை வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றும் எங்கள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. ராமானுஜ மடாலயத்தை எனது தந்தையார் சொந்த செலவில் பரமரித்து வந்தார், வேறு யாரிடமும் பணம் வாங்கி மேற்படி ராமானுஜ மடாலயத்தை நிர்வகிக்கவில்லை. மேற்படி ராமானுஜ மடாலயத்திற்கு அறக்கட்டளைதாரர் என்ற முறையில் எனது தந்தை எவ்வித ஆவணமும் யாருக்கும் எழுதி கொடுக்கவில்லை. எனது தந்தை காலத்தில் ராமானுஜ மடாலய நிர்வாகம் சரியாக நடக்கவில்லை, நிர்வாகம் சரியில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை தாவா சொத்தை பொறுத்து ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் எனது தந்தை தாவா சொத்து தனக்கு உரிமையுண்டு என்று சொல்லவில்லை, நிர்வகித்து மட்டும் வந்ததாக மட்டும் தான் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து அறக்கட்டளைக்கு சொந்தமானது அல்ல, நாங்கள் அதில்

அறக்கட்டளைதாரர்களும் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை மேற்படி ராமானுஜ மடாலயத்தை நிர்வகிக்க எனது தம்பிக்கு தான் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி எழுதி கொடுத்த விவரமும் எனக்கு தெரியாது, நான் எழுதி கொடுத்த சமயத்தில் வெளியூரில் இருந்தேன். ராமானுஜ மடாலயத்தை 1வது பிரதிவாதி தான் நல்ல முறையில் நிர்வகித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு எண்.308/1992 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தான் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் நான் அறக்கட்டளையின் டிரஸ்டி என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வழிபாட்டிற்கு பிரதிவாதி அனுமதிக்கவில்லை. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மடாலயத்தை நிர்வகிக்க Scheme வனைவதற்கு தனியாக வழக்கு தாக்கல் செய்து கொள்ளுங்கள் என்று மேற்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு ¼ பங்கு பாத்தியம் இல்லை என்பதால் நான் தாவா மடாலயத்திற்கு அறக்கட்டளைதாரராக வரமுடியாது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் போது மடாலயம் சம்பந்தமாக பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளதால் எனக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி மடாலயத்தை சரியான முறையில் நிர்வகித்து வருகிறார் என்றால் சரியல்ல. மடாலயத்தை நிர்வகிப்பதற்கு விதிமுறைகள் எதுவும் வகுக்கப்படவில்லை. தாவா மடாலயம் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக 1வது பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுவதற்கு நான் கடிதம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக 1வது பிரதிவாதி எவ்வித பாராதினமும் செய்யவில்லை என்றால் சரிதான். மடாலயம் சம்பந்தமாக என்னென்ன நடைமுறையை கையாள வேண்டும் என்று என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறு என்றால் சரியல்ல. நான் 1வது பிரதிவாதியிடம் தற்போது வரை மடாலயம்

சம்பந்தமாக எவ்வித கணக்கும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாய்மொழியாக 1வது பிரதிவாதியுடன் எவ்வித செலவு கணக்கும் கேட்கவில்லை, எல்லாரும் ஒன்றாக தான் செலவு செய்தோம். இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.24 18:21:47 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.